# சங்கச்செவ்வியலில்

# வழிகாட்டுவோரின் (Creative Individuals) வாழ்வியல் விழுமியங்கள்

**'இளம் அறிஞர்'** முனைவர் **ப. வேல்முருகன்**, எம்.ஏ.,எம்.ஏ.,எம்.ஏ.,எம்.பில்.,பி.எட்.,பிஎச்.டி.(**தமிழ்த்துறை)**
**தியாகராசர் கல்லூரி , மதுரை-625 009**
மின்னஞ்சல்: pdrvelmurugan@gmail.com

**முன்னுரையாக**: சங்ககால நாகரிகம் ஐந்திணைப் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு அந்தந்தத் திணைப்பகுதிகளில் தோன்றிய எதிர்ப்புகளைச் சமாளித்ததனால் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற நிலப்பகுதிகளில் அந்தந்தப் பகுதிக்கேற்ற நாகரிகங்கள் தோன்றின. இவைகள் ஒன்றோடொன்று இணைந்து தமிழ்ச் சமுதாயத்தை ஒன்றுபடுத்தின. ஒரு நாகரிகத்தின் வளர்ச்சிக் காலத்தில் ஒரு சமுதாயத்தில் அடங்கியுள்ள மக்கள் தொகையை இரு கூறாகப் பிரிக்கலாம். 1.வழிகாட்டுவோர்(Creative Individuals) 2. பின்பற்றுவோர் (Uncreative Majority)

வழிகாட்டுவோரைச் சமுதாயத்தின் தலைவர்கள் எனக் கூறலாம். அவர்களின் தொகை சிறியதேயாகும். அவர்களுடைய கொள்கைகளையும் போதனைகளையும் பின்பற்றுவோர் பெருந்தொகையினராவர். இவ்விரு பிரிவினர்களில் வழிகாட்டுவோரை (Creative Individuals) என்றும் அவர்களைப் பின்பற்றும் பெரும்பான்மை மக்களைக் (Uncreative Majority) என்றும் (Arnold Toynbee) கூறுவர்.

சங்ககாலத்தில் தமிழ்நாட்டு முடியுடை வேந்தர்களுக்கும் சிற்றரசர்களுக்கும் வழிகாட்டிகளாகவும், அமைச்சர்களாகவும், தூதர்களாகவும், மெய்ப்பொருள் உணர்த்தும் தத்துவ ஞானிகளாகவும் புலவர்கள் விளங்கினர். அறத்திற்கும் மறத்திற்கும், நன்மைக்கும் தீமைக்கும், செய்யத்தகுவனவற்றிக்கும் செய்யத்தகாதனவற்றிற்கும் உள்ள வேற்றுமைகளை விளக்கி வேந்தர்களையும், வேளிர்களையும் நல்வழிப்படுத்தினர். அவர்களிடம், பொருள்பெறுவது முக்கிய நோக்கமாயினும், உண்மையைக் கூறிக் கடமைகளை உணர்த்தியவர்கள் சங்ககாலப் புலவர்கள். இப்புலவர்களுடைய பாடல்களிலிருந்து சங்ககால மக்களின் பண்பாட்டையும் அதைப் புலவர்கள் போதித்த முறைகளையும் நாம் சிறிது ஆராய்வோம

**அன்புடைமையும் நட்புடைமையும்**

சங்ககாலத்தில் சமுதாய அமைப்பில் மக்களிடத்திலும் மற்ற உயிர்களிடத்திலும் அன்பு வேண்டும் என்ற சிறந்த கொள்கையைச் சங்கப்புலவர்கள் வற்புறுத்தியுள்ளனர். அக்கால மக்கள் ஒருவருக்கொருவர் உயிரையே விடுவதற்குரிய பண்புடையவர்களாக இருந்தனர். பிசிராந்தையார், பொத்தியார் என்ற இரு சங்கப்புலவர்கள் கோப்பெருஞ்சோழனுடன் மிகுந்த நட்புகொண்டு அவர் வடக்கிருந்து உயிர்விடத் துணிந்தபோது தாங்களும் வடக்கிருந்து உயிர்விடத் துணிந்தனர். (புறநானூறு: 215, 216, 222)
இவ்விருவருள் பிசிராந்தையாரின் அன்புடைமை பற்றிக் கோப்பெருஞ்சோழன்,

'தென்னம் பொருப்பன் நல் நாட்டுள்ளும்
பிசிரோன் என்ப, என் உயிர் ஓம்புநனே;
செல்வக் காலை நிற்பினும்,
அல்லற் காலை நில்லலன் மன்னே' - (புறம் - 215)

'இகழ்விலன்; இனியன்; யாத்த நண்பினன்;
புகழ் கெட வருஉம் பொய் வேண்டலனே;
தன் பெயர் கிளக்கும் காலை, 'என்பெயர்
பேதைச் சோழன்' என்றும், சிறந்த
காதற் கிழமையும் உடையன்: அதன் தலை,
இன்னது ஓர் காலை நில்லலன்;
இன்னே வருகுவன்; ஒழிக்க, அவற்கு இடமே!' –
(புறம் - 216)

என்று கூறிய சொற்களும் பொத்தியார் பாடிய பின்வரும் அடிகளும் கொண்டு சங்ககாலத்துச் சமுதாயம் அன்புடைமை என்னும் அடிப்படையில் அமைந்திருந்தது எனக் கூறலாம். பொத்தியார்,

'அழல் அவிர் வயங்கு இழைப் பொலிந்த மேனி,
நிழலினும் போகா, நின் வெய்யோள் பயந்த
புகழ்சால் புதல்வன் பிறந்த பின் வா' என,
என் இவண் ஒழித்த அன்பிலாளா!' - (புறம் -222)

'நிலை பெறு நடுகல் ஆகியக்கண்ணும்,
இடம் கொடுத்து அளிப்ப, மன்ற - உடம்போடு
இன் உயிர் விரும்பும் கிழமைத்
தொல் நட்புடையார் தம்முழைச் செலினே' - (புறம் - 223) எனக் கோப்பெருஞ்சோழனுடைய அன்பையும், நட்பையும் புகழ்ந்துள்ளார்.

ஆதனுங்கன் என்ற குறுநில மன்னனிடம் கள்ளில் ஆத்திரையனார் என்ற புலவர் மிக்க அன்புகொண்டிருந்தார். அவருடைய அன்பு எத்தகையது என்பதனை அப்புலவரே பின்வருமாறு வெளிப்படுத்தியுள்ளார். "இறைவ, நீ எப்பொழுதும் என் நெஞ்சில் இடம் பெற்றுள்ளாய். என் நெஞ்சை யாராவது திறந்து பார்த்தால் அதனுள் உன்னையே காண்பர். நான் உன்னை எப்பொழுதும் மறக்கமாட்டேன். என்னுயிர் என் உடம்பை விட்டுப் பிரிந்துபோகும் காலத்தில்தான் உன்னை நான் மறந்துவிட முடியும்."(புறம் -175)

ஒருவற்கு ஒரு துன்பம் உண்டாகில் அவ்வூரில் இருக்கும் மக்கள் அனைவரும் துன்புறுவர். ஒல்லையூர்க்கிழான் மகன் சாத்தன் இறந்தபொழுது கீரத்தனார் என்ற புலவர் ஒரு முல்லைக் கொடியை நோக்கி

'இளையோர் சூடார்; வளையோர் கொய்யார்;
நல் யாழ் மருப்பின் மெல்ல வாங்கி,
பாணன் சூடான்; பாடினி அணியாள்;
ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த
வல் வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே?'
(புறம் -242)

என்று கூறிய செய்யுள் நம்முடைய நெஞ்சை உருக்குவதாகும். சங்க காலப்புலவர்கள் மறுமையிலும் தங்கள் அன்பும் நட்பும் தொடர வேண்டுமெனவும் விரும்பினர். வேள்பாரி இறந்தபிறகு அவன் மகளிரைப் பாதுகாப்பில் வைத்துவிட்டு, கபிலர் பாரியைத் தன் மனக்கண்ணில் கண்டு, "இப்பிறப்பில் நம் இருவரையும் கூட்டி ஒன்றிய நட்பால் உயர்வாழ்வு வாழச்செய்த

நல்வினை மறுபிறப்பிலும் உன்னோடு கூடி உறையும் வாழ்வை நல்குவதாக" (புறம் -236) – எனப்பாடினார்.

**தன்னலமின்மையும் பொதுநலவாழ்வும்**

தன்னலம் கருதாது நாட்டு மக்களின் நலத்தைக் கருதுவதும் சங்ககாலப் புலவர்களின் நோக்கமாகும் என்பதற்குப் புறநானூற்றில் பல சான்றுகள் உள்ளன. சங்ககால மக்களுக்கு நல்வழி காட்டுவோராக இருந்த இருபுலவர்களை மட்டும் இங்குப் பார்க்கலாம். முதலாவதாகப் பாண்டியன் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதியை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

'உண்டால் அம்ம, இவ் உலகம் - இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும், 'இனிது' எனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவு இலர்;
துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சி,
புகழ் எனின். உயிரும் கொடுக்குவர், பழி எனின்.
உலகுடன் பெறினும், கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனையர் ஆகி,
தமக்கு என முயலா நோன் தாள்,
பிறர்க்கு என முயலுநர் உண்மையானே' - (புறம் - 182)

இப் புறநானூற்றுச் செய்யுள் உலகப் பேரறிஞர்களும் வழிகாட்டிகளும் சேர்ந்து புகழத்தக்க ஒரு சொல்லோவியமாகும். கௌதமபுத்தர், இயேசு கிறித்து, நபிகள்நாயகம், காந்தியடிகள், ஆபிரகாம்லிங்கன் முதலிய பெரியோர்களுக்கு ஏற்றதொரு கவியாகும். சங்ககாலத்தில் வாழ்ந்த புலவர்கள் இலாபத்தை எதிர்பார்க்காது சமூகத்திற்கு உதவவேண்டும் எனக் கருதினர். இம்மையிலும் மறுமையிலும் கிடைக்கக்கூடிய பலன்களை எதிர்பார்த்து அறத்தை விலைப்பொருளாகக் கொள்ளக்கூடாது என்னும் கருத்தை உட்கொண்டு உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் என்பார்,

'இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்' எனும்
அற விலை வணிகன் ஆஅய் அல்லன்;
பிறரும் சான்றோர் சென்ற நெறி என,
ஆங்குப் பட்டன்று, அவன் கைவண்மையே' (புறம் - 134)

எனக் கூறுவர். இதனால் சங்க காலத்தில் வாழ்ந்தோர் தாம் ஒருவருக்கு ஓர் உதவி செய்யும்போது, மறுமைப் பயனை எதிர்பார்க்கவில்லை. அறத்தை விலைகொடுத்து வாங்கும் அறவிலை வணிகர் அல்லர் என்பது புலனாகும்.

நீண்டகாலம் வாழ்வைக் கொடுக்கும் நெல்லிக்கனியைத் தானே உண்ணாது ஔவையாருக்குக் கொடுத்து அவர் நீண்ட காலம் வாழும்படி செய்த அதிகமான் நெடுமான் அஞ்சியும், ஒரு வாளைக் கொடுத்துத் தன் தலையை அறுத்துத் தன் தம்பியிடம் கொடுக்கும்படி கொடுத்த குமணனும் இந்த இனத்தைச் சேர்ந்தவர்களாவர்.

**ஊழ்வினைப்பயனும் - உலகப் பொதுநோக்கும்**

'யாதும் ஊரே: யாவரும் கேளிர் ;
தீதும் நன்றும் பிறர் தர வாரா;
நோதலும் தணிதலும் அவற்றோரன்ன;
சாதலும் புதுவது அன்றே: வாழ்தல்
இனிது என மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்,
இன்னாது என்றலும் இலமே; 'மின்னொடு
வானம் தண் துளி தலைஇ, ஆனாது
கல் பொருது இரங்கும் மல்லல் பேர் யாற்று
நீர் வழிப்படூஉம் புணைபோல், ஆர் உயிர்
**முறை வழிப்படூஉம்' என்பது திறவோர்**
**காட்சியின் தெளிந்தனம் ஆகலின்**, மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே'
(புறம் -192)

கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர்துறக்கத் துணிந்த பொழுது அவரைக்கண்டு தானும் உயிர்விடத் துணிந்த பிசிராந்தையார் வயதினால் முதிர்ச்சியடைந்திருந்தபோதிலும் இளமை நலத்துடன் காணப்பெற்றார். இவ்விளமை நலத்திற்குக் காரணம் யாது என்று வினாவியவர்க்குப் பதில்கூறும் முகத்தான் பிசிராந்தையார் ஒரு பாடலை (புறம் -191) இயற்றியுள்ளார். அதன் பொருள்,

"என் மனைவி இல்வாழ்க்கைக்கு ஏற்ற மாண்புகளுடையவள். அறிவும் நிரம்பியவள். என்னுடைய புதல்வர்களும் மிகுந்த அறிவுள்ளவர்கள். என்னுடைய ஏவலாளரும் நான் கூறியபடியே செய்வர். என்னுடைய நாட்டு அரசனும் முறையல்லாதன செய்யான். செய்யத் தகுந்தவற்றை அவ்வப்போது செய்து குடிமக்களைப் பாதுகாப்பான். என்னுடைய ஊரில் பல சான்றோர்கள் உள்ளனர். அவர்கள் கல்வியறிவும், இயற்கை அறிவும் நிறைந்து, புலன்களை அடக்கிய அருள் உள்ளம் படைத்தவர்கள். அவர்களோடு நான் கூடிப்பழகுவதாலும் 'நான் இளமையோடு இருக்கிறேன்". இச்செய்யுள் (புறம் - 191) சங்ககால மக்கள் அரசியலிலும் சமூகத்திலும், இல்லறத்திலும் மேன்மையுற்றிருந்தனர் என்பதற்கு ஏற்ற எடுத்துக்காட்டாகும்.

சங்ககாலச் சான்றோரின் இலக்கணம் யாது என்று விளக்கிக் கூறுவது 'உண்டால் அம்ம, இவ் உலகம்' என்று தொடங்கும் செய்யுளாகும் (புறம் -182). இந்தச் சான்றோர்கள் 'தேவாமிழ்தம் கிடைத்தாலும் அதைத் தாங்கள் மட்டிலுமே உண்ணமாட்டார்கள், யாரிடமும், எதனோடும் வெறுப்புக் கொள்பவர்கள் அல்லர், பிறர் அஞ்சும் துன்பங்களுக்குத் தாமும் அஞ்சுவர். அதனால் புதிய நற்செயல்களைச் செய்யாது மனம் மடிந்து இருப்பவரும் அல்லர். புகழ் தரக்கூடிய தருமங்களைச் செய்வதற்குத் தம் உயிரையும் கொடுப்பர். இவ்வுலகச் செல்வங்கள் அனைத்தையும் பெறுவதாக இருந்தாலும் பழிச்சொற்களை விரும்பமாட்டார். தங்களுடைய கடமைகளை நிறைவேற்றும்பொழுது அவர்களுக்குத் தளர்ச்சி ஏற்படுவதில்லை. தமக்கென முயற்சி செய்யாமல் பிறர் நலம் கருதி வாழ்ந்தனர்.

சங்ககாலத்தில் வாழ்ந்த சான்றோர்கள் விரிந்த மனப்பான்மையையும் உலகத்திலுள்ள மக்கள் அனைவரும் ஒரே இறைவனால் படைக்கப்பெற்றவர்கள் என்ற கொள்கையையும் கொண்டிருந்தனர். வரலாற்று நிகழ்வுகள் இறைவனுடைய ஆணையினாலும், ஊழ்வினைப் பயனாலும் நடைபெறுகின்றன என நம்பினர். திறவோர் என்ற சான்றோர்கள் பெரிய பதவியில் இருப்பவர்களிடம் இச்சகம் பேசி வாழவில்லை. தங்களைவிடத் தாழ்ந்தவர்களை இகழ்ந்து பழித்தல் ஒரு கடுகளவேனும் இல்லை என்று கணியன்பூங்குன்றனார் பாடியுள்ளார்.

இன்பமும் துன்பமும் கலந்தது இவ்வுலக வாழ்க்கை, இயன்றவரையில் நல்ல செயல்களைச் செய்வது சான்றோர் கொள்கை.

' நெருதல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும், பெருமை யுடைத்திவ் வுலகு - என்னும் குறட்கருத்தினை (336) உணர்ந்து உயிர் உள்ள பொழுதே,

'நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்,
அல்லது செய்தல் ஓம்புமின்; அதுதான்
எல்லாரும் உவப்பது; அன்றியும்,
நல் ஆற்றுப் படூஉம் நெறியுமார் அதுவே"
(புறம் -195)

**எலி வாழ்வு – புலிவாழ்வு : சிறந்தது எது?**
எவ்விதமான உழைப்பும் முயற்சியும் இன்றிப் பிறரை வஞ்சித்து வாழும் மக்கள் எலியைவிட மோசமானவர். ஓர் உழவன் தன் நிலத்தைப் பண்படுத்தி நீர் பாய்ச்சி விதை விதைத்து, காப்பாற்றி நெற்கதிர்களை விளைவிக்கின்றான். இதுவரையில் நெல் விளைவதற்கு எந்த முயற்சியும் செய்யாத எலி நெற்பயிர் விளைந்து கதிர் முற்றிய பிறகு அவற்றைக் கடித்துக்கொண்டு தன்னுடைய வளைகளில் சேர்த்துக்கொண்டு பின் அவற்றை உண்கிறது. உழவனுடைய பெரு முயற்சியின் பயனை அவன் அனுபவிக்காதவாறு செய்துவிடும். இவ்விதம் பிறனுடைய உழைப்பால் கிடைத்த பொருட்களைச் சங்ககால மக்கள் விரும்பவில்லை, விரும்பக்கூடாது என்று சோழன் நல்லுருத்திரன் (புறம்.190) கூறுவன்.

எலியைப்போல் பிறரை வஞ்சிக்காமல் புலியைப் போல் முயற்சியோடு வாழவேண்டும் எனவும் கூறியுள்ளான். ஒரு புலி காட்டில் இரை தேடி விரைவாகப் பாய்ந்தது. அப்பொழுது எதிர்பாராதபடி பன்றியொன்று அதன் வேகத்தில் அடிபட்டு இடப்பக்கமாக வீழ்ந்தது. புலிக்குப் பசியிருந்தபோதிலும் அப்பன்றியைப் புலி உண்ணவில்லை. அதற்கு மானக்குறைவாகத் தோன்றியதுபோலும். எனவே, அதைவிடுத்து மலைப் பிளவுகளில் பாய்ந்து ஓர் ஆண்யானையைத் தனது வலப்பக்கத்தில் விழும்படி செய்து தன் பசியை ஆற்றிக்கொண்டது. அவ்வாறு செய்த புலியைப் போல மெலிவில்லாத நினைப்பும் அதற்கேற்ற முயற்சி உரமும் உடையவராகச் சங்ககாலத் தமிழர் வாழ்ந்தனர். முன்னோர் தேடிய சொத்து, சீதனப் பொருள், நன்கொடை, களவு, சூது, கடுவட்டி, மதுபானக்கடைகளில் வரும் இலாபம், கள்ளநோட்டு அடித்தல் முதலிய வழிகளைப் பின்பற்றும் இக்காலத்துச் செல்வர்களுக்கும் சங்க காலத்தியச் சான்றோருக்கும் இருந்த வேற்றுமைகளை இச்செய்யுளின் மூலம் நாம் உணரலாகும்.

**நிறைவாக:** ஒரு நாகரிகத்தின் வளர்ச்சிக் காலத்தில் ஒரு சமுதாயத்தில் அடங்கியுள்ள மக்கள் தொகையை, வழிகாட்டுவோர்(Creative Individuals) எனவும் பின்பற்றுவோர் (Uncreative Majority) எனவும் இரு கூறாகப் பிரிக்கலாம்.

வழிகாட்டுவோரைச் சமுதாயத்தின் தலைவர்கள் எனக் கூறலாம். அவர்களின் தொகை சிறியதே. அவர்களுடைய கொள்கைகளையும் போதனைகளையும் பின்பற்றுவோர் பெருந்தொகையினரே. சங்க காலத்தில் தமிழ்நாட்டு முடியுடை வேந்தர்களுக்கும் சிற்றரசர்களுக்கும் வழிகாட்டிகளாகவும், அமைச்சர்களாகவும், தூதர்களாகவும், மெய்ப்பொருள் உணர்த்தும் தத்துவ ஞானிகளாகவும் பிசிராந்தையார், கோப்பெருஞ்சோழன், பொத்தியார், சோழன் நல்லுருத்திரன், கணியன்பூங்குன்றனார், உறையூர் ஏணிச்சேரி முடமோசியார், பாண்டியன் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி, கபிலர், கீரத்தனார், ஆத்திரையனார் போன்ற சங்கப் புலவர்கள் விளங்கினர். அறத்திற்கும் மறத்திற்கும், நன்மைக்கும் தீமைக்கும், செய்யத்தகுவனவற்றிக்கும் செய்யத்தகாதனவற்றிற்கும் உள்ள வேற்றுமைகளை விளக்கி வேந்தர்களையும், வேளிர்களையும் நல்வழிப்படுத்தினர். அவர்களிடம், பொருள்பெறுவது முக்கிய நோக்கமாயினும், உண்மையைக் கூறிக் கடமைகளை உணர்த்தியவர்கள் சங்ககாலப் புலவர்கள். இப்புலவர்கள் வழிகாட்டுவோர் தகைமைக்கான சமுகநிலைப்பாட்டில் தங்கள் பாடல்களிலிருந்து சங்ககாலத்தில் வாழ்ந்த சமுகத்தின் அனைத்துத் தரப்பிலான நிலையினர்க்கும் தமிழ்ச் சமுகம் சார்பிலான மக்களுக்கு மட்டுமல்லாது உலகலாவிய மானுட சமுகத்திற்கான வாழ்வியல் விழுமியங்களைப் போதித்துள்ளனர் என்ற செய்தியை இவ் ஆய்வுக்கட்டுரை விளக்கியுள்ளது.

**ஆய்வுக் கட்டுரைக்குத் துணைநின்ற நூல்கள்:**


- ✓ பாலசுப்பிரமணியன், கு.வெ.முனைவர்.(உரையாசிரியர்கள்)., **புறநானூறு(மூலமும் உரையும்)-புத்தகம்-1,2**., நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், அம்பத்தூர், சென்னை-600 098. மூன்றாம் அச்சு - பிப்பிரவரி.2007
- ✓ சாமிநாதையர்.உ.வே., **புறநானூறு மூலமும் உரையும்,** உ.வே.சாமிநாதையர்பதிப்பு., சென்னை, மறுபதிப்பு-1971
- ✓ பாலசுப்பிரமணியம்.சிற்பி., (உரை)., **திருக்குறள்,** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், அம்பத்தூர், சென்னை-600 098. பதிப்ப ஆண்டு-2010
- ✓ சிதம்பரனார்.சாமி., **பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும்**. மணிவாசகர் பதிப்பகம். சிதம்பரம். பதிப்பு ஆண்டு-2000.
- ✓ சேதுப்பிள்ளை.ரா.பி., **தமிழர் வீரம்.** பழனியப்பா பிரதர்ஸ் சென்னை. பதிப்பு ஆண்டு-1966.
- ✓ வானமாமலை.நா., **தமிழர் வரலாறும் பண்பாடும்**, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், அம்பத்தூர், சென்னை-600 098. நான்காம் பதிப்பு-1992.
- ✓ இராமலிங்கம்.என்.இ., **புறநானூறும் வாழ்வியலும்**, திருவள்ளுவர் பதிப்பகம், சென்னை. பதிப்பு ஆண்டு-1994.